*News and Articles in Tamil and English Please send them to:*

THE EDITOR,
The Morning Star,
Diocesan office,
Vaddukoddai.

# THE MORNING STAR

Registered as a New-paper at the General Post Office. Sri Lanka
under No. Q / J / 104 / News / 89
*Established 1841 : A Christian Weekly : Published Every Friday*
Vol:- 155 Jaffna, Friday 24 June 1994 No: 14
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscriptio
[illegible]

*For Advertisements*
Apply to:
THE MANAGER
The Morning Star,
Diocesan office,
Vaddukoddai

NALLUR BRANCH LIBRARY

## Peace in Sri Lanka soon

Thamilchelvan Leader of the Political wing of LTTE, and Anton Balasingam, Political Adviser, LTTE in an interview to BBC stated that the LTTE is prepared for unconditional peace talks. Bradman Weerakone, Adviser to the President, said that the government has, for the first time taken this statement into serious consideration; but he did not state whether the government's response is positive. Mean while Anura Bandaranayake, the newly appointed Minister of National Integrations stated that, Sinhalese Tamils and Muslims should follow the path of Mandela and de Clark and Rabin and Arafat in solving the long standing ethnic problem in the country.

### BOMBING AT ATCHUVELY

Helicopter strafing took place on 14th June from 12.00 noon till 3.00 p m around Idaikadu and Vallai in Atchuvely. This was followed by bombing from Air Force planes.

### Continuing Shelling

Shells are being hurled from Karainagar Army Camp practically every night These shells fall along the coastal areas of Ponnalai Moolai and Chullipuram. A Buccara plane flies along the coastal area every evening at about 6. 20 p.m The people of the area live in anticipation of bombing.

### Gurunagar & Pasaiyoor Areas in Jaffna shelled frequently

Gurunagar and Pasaiyoor are two coastal suburbs of Jaffna City. These two thickly populated suburbs are frequently shelled from Mandaithivu Army Camps. On Sunday, 12th June a shell fell near St. James Church, Gurunagar. This happened soon after the Sunday mass was over. Another fell inside the fish market killing four and injuring fifteen. The residents now live in fear because of frequent shelling. They have requested the Government Agent, Jaffna to declare the area around fish market a safety zone.

### Infectious Eye Disease in Jaffna

A new kind of eye disease is spreading in Jaffna now. The cause of the disease is bacterial infection and is aggravated by heat and is spread by flies, according to the health authorities

Since this eye disease can affect the eyesight, those contacted should take immediate treatment, warn health authorities. They are also advised to stay indoors to prevent spreading.

## The Church and AIDS

R. G. Porter

Not only has the film industry been working on the plague of teenage AIDS.('Philadelphia the story of a lawyer who contracts the disease, won several of the coveted Academy Awards— "Oscars"-for a well made treatment of the subject this year ) But short new items have appeared in church publications recently to indicate that Christians have not just reacted with satisfied malevolence toward this really international plague that has most often struck down gay men and women in the West.

In a recent edition of the United Church News, there was the news of a video diary of two men struggling with AIDS which appeared on the public Broadcasting System leat June – 'Silverlake Life: The View from Here'. Bill Johnson of the United Church Board for Homeland ministries (Ministries within the United States) said that the documentary 'may be the most important film about AIDS ever made. The film was shot on a day-to-day basis, as the two subjects lived with the disease and ultimately died of it:

One of the recipients of the UCC's Antoinette Brown Award ( named for the first woman ordained in the United States) last year was Laurie Whinuem Etter co- pastor of Niantie Community U C C in Connecticut. Ms. Etter's activities include a Monthere in prison Project where church volunteers help keep prisoners in contact with their community" Rev. Etter, however, also runs a gospel choir of prisoners! and most of these are HIV positive (AIDS can develope at

(Continued on page 4)

## Prof. A. Thurairajah Expired

Prof. A Thurairajah ex Vice Chancellor of Jaffna University died on 12th June in a Nursing Home in Colombo. He was suffering from leukaemia for some time, This forced him to retire from the post of Vice Chancellor at the end of March 1994. He then took up appointment at Open University. Though he suffered from leukaemia cause of his death was due to secondary infection. He died at the age of 60, his date of birth being 10th November 1934.

Late Prof. Thurairajah hailed from Imaian Udupiddy in the Vadamarachchi area of Jaffna. He had his early education at Udupiddy American Mission School and entered University of Ceylon from Hartley College in July 1953. He was a bright student right throughout and graduated from the University with 1st Class in Civil Engineering.

He was sent on scholarship to England and obtained his Ph D in Civil Engineering from Cambridge University in December 1961. Late Prof. Thurairajah started his career as Assistant Engineer in the P. W. D. Then joined University of Ceylon as lecturer in Civil Engineering in 1962. In 1971 he was appointed as Professor of Civil Engineering. Then was elected Dean of the Faculty of Engineering in 1975 May. He served as Prof. of Civil Engineering, British Columbia University, Canada when he was on his sabbatical from October 1977 to November 1978. He returned to his earlier post as Dean of the Faculty. After serving as Professor and Dean of Engineering, Open University from 1985 to 1987 was appointed Vice - Chancellor of University of Jaffna in March 1988.

Prof. Thurairajah was an eminent scholar and educationist. He built up Jaffna University against all odds during his period. Agricultural Faculty was established in Kilinochchi. His dream was to set up an Engineering Faculty in Jaffna too. But it had not materialized due to many factors. He also held many honorary posts of which important ones are Member of Janasaviya Trust fund since 1990 and Member of Commission on Technical Education from 1990.

(Continued on page 4)

## THE BOOKS OF BOOKS

-WILLIAM BARCLAY

I remember going to a translation panel in Oxford without a very essential part of my luggage. I went without an English Bible.

I went into the town to get a Bible, and very naturally, since I am well acquainted with Bibles at home, I did not buy an expensive one.

Then I happened on what must be very nearly the Bible bargain of all time–the Fontana edition of the Revised Standard Version, magnificently printed and even in its paper covers beautifully bound, and all for forty pence. I had not known that this edition existed until I saw it then, and it seemed to me the cheapest price for the best book that I had ever seen.

**This set me thinking**

We do not realise how fortunate we are. Of course, in the early days, books were copied by hand. There was, in the fourth century AD; when the great manuscripts were being copied, a standard rate of pay for scribes. Books for copying were divided into what were called stichoi. A stichos (singular form of the word), is not a line: It was originally the length of an average of a hexameter length of poetry - the line in which Hower wrote - and it was counted as sixteen syllables, So the books

(Continued on page 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி நெறி முடிவுப் பாசறையும் சான்றிதழ் வழங்கும் வைபவமும்

தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனத்தினால் பகல் பராமரிப்பு நிலைய ஆசிரியைகளுக்கான பயிற்சி நெறி கடந்த ஒரு வருட காலமாக யாழ்ப்பாணக் கல்லூரி ஹவுலண்ட் விடுதியில் நடைபெற்று வந்தது இப்பயிற்சி நெறியின் இறுதி அம்சமாக இரண்டு நாள் பாசறையும் அவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் இடம்பெற்றது இவர்களுக்கான பாசறை இரண்டு முழு நாட்களாக யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெற்றது. இப்பாசறையில் தென்னிந்திய திருச்சபை பகல் பராமரிப்பு நிலைய பயிற்சியாளர்களும் யாழ்ப்பாணக் கல்லூரி சாரணிகளும் பங்கு பற்றினர். பாசறையின் இரண்டாம் நாள் இறுதி நிகழ்ச்சியாக பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் இடம் பெற்றது. இந் நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக தென்னிந்திய திருச்சபையின் பேராயர் அதி வணக்கத்திற்குரிய கலாநிதி எஸ் ஜெபநேசன் அவர்களும் அவர் பாரியார் திருமதி வி ஜெபநேசன் அவர்களும் கலந்து கொண்டனர். பாசறை முதல்வர் செல்வி எஸ் பி குலசிங்கம் அவர்களின் தலைமையில் இந்நிகழ்ச்சி ஆரம்பமாகியது. இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினர் அவர்களும் சிறப்பு விருந்தினர்களும் பாசறைக் குழு தலைவர்களால் முடி அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். இக்கூட்டத்தின் தலைவர் விருந்தினர்களை வரவேற்று பேசியதன் பிற்பாடு பிரதம விருந்தினர் பேராயர் அதி வணக்கத்திற்குரிய கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் உரையாற்றினார் அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினராக வருகை தந்த இலங்கைச் செஞ்சிலுவை சங்க யாழ் கிளை தலைவர் வைத்திய கலாநிதி ரி சிங்கராஜா அவர்கள் உரையாற்றினார் அதனைத் தொடர்ந்து பாசறை இயக்குனர் திரு. டபிள்யு என். தேவகடாட்சம் அவர்களும் உரையாற்றினார். திருமதி வி ஜெபநேசன் அவர்கள் ஆசிரியைகளுக்கான சான்றிதழ்களையும் பாசறையில் பங்கு பற்றியவர்களுக்கான சான்றிதழ்களையும் வழங்கினார்.

மேலும் இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் மேற்கு செஞ்சிலுவை சங்க பிரிவுத் தலைவர் திரு என் குகராஜா சர்வதேச செஞ்சிலுவை சங்க யாழ் முதல்வர் திரு செட்றிக் பிலிா சர்வ தேச செஞ்சிலுவை சங்க மருத்துவ இணைப்பதிகாரி செல்வா எம் லேவியன் லயன் வைத்திய கலாநிதி ரி பதேரன் ஆகியோர் வருகை தந்திருந்தனர்

இப்பாசறையின் முதல் நாள் கொடியேற்றத்தின் பின் நற்சிந்தனையை அருள் திரு. அ ஜெயக்குமாரன் அவர்களும் இரண்டாம் நாள் கொடியேற்றத்தின் பின் நற்சிந்தனையை அருள் திரு. எ எ. போல் அவர்களும் நடாத்தினார்கள். இவ்விரண்டு பாசறையின் போது தலைமைத்துவம் வேதப் புதிர் போட்டிகள் முதலுதவி சித்திர கைவேலை போட்டிகள் குழு ஆலோசனைகள் உடற்பயிற்சி பாட்டுப் போட்டிகள் கிம்ஸ் விளையாட்டுப்போட்டி பேச்சுப்போட்டி புதிர்கள் கவிதை ஆக்கம் நாடகங்கள் போன்றவை இடம்பெற்றன.

இவ்விரண்டு நாள் பாசறையின் போது பாசறை இயக்குனராக செஞ்சிலுவைச்சங்க முதலுதவி திட்ட அலுவலகர் திரு டபிள்யு என் தேவகடாட்சம் அவர்கள் செயற்பட்டு வந்ததோடு இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்யப்பட்ட இப்பாசறையை அவர் மிகவும் சிறப்பான முறையில் நடாத்தியமை குறிப்பிடத்தக்கது

இறுதி நிகழ்ச்சியின் போது திருமதி வி.போல் அவர்கள் நன்றியுரை கூறினார். இந்த தலைமைத்துவ அபிவிருத்திப் பாசறைக்கு ஆதீனத்திட்ட இயக்குனர் திரு என் எஸ் பி தம்பு அவர்களும் திருமதி வி போல் அவர்களும் பாசறை அமைப்பாளர்களாக இருந்து செயற்பட்டனர்.

---

## மட்டக்களப்பில் இராணுவ நடவடிக்கை

பம்பரச் சக்கரம் என்னும் பெயரில் சிறிலங்கா ராணுவநடவடிக்கை ஒன்று 13ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரிகேடியர் கெமுனு குலதுங்க அறிவித்துள்ளார்.

---

### சிறிலங்காவின் பாராளுமன்ற தேர்தல் ஆகஸ்ட்டில்

சிறிலங்காவின் பாராளமன்றத் தேர்தலை ஆகஸ்ட் மாதம் நடத்துவதற்குத் திட்டமிடப்படுகின்றது வட, கிழக்கு மாகாணங்கள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது இதில் தேர்தல் நடத்துவது சாத்தியமில்லை என்ற ஓர் காரணத்தை கூறி இப்பகுதிகள் தவிர்ந்த மற்றைய பகுதிகளில் ஆகஸ்ட் மாதத்தில் பொது தேர்தல் நடத்த திட்டமிடப்படுவதாக செய்திகள் தெரிவித்தன முன்பு இது பெப்பிரவரி மாதத்தில் வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. தொடர்ந்தே ஜனாதிபதி தேர்தல் திட்டமிட்டபடி டிசம்பர் மாதத்தில் நடத்தப்படும்.

---

### பல்கலைக்கழக புலமைப் பரிசில் ரூபா 250 ஆல் அதிகரிப்பு.

பல்கலைக்கழகங்களில் அரசாங்கத்தினால் கொடுக்கப்படும் "மகாபோல" புலமைப்பரிசில் ரூபா 250 இனால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் இப்பரிசில் ரூபா ஆயிரமாக இருந்தது. சிலப்புப்பட்டதாரிகளிற்கு இந்நான்கு வருடங்களும் வழங்கப்பட்டது நிர்வாக நஷ்டங்களின் காரணமாக நீடிக்கப்படும் காலத்திற்கு ரூபா 500 நிவாரண படியாக வழங்கும்படியும், ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

---

### குமார் பொன்னம்பலம் ஜனாதிபதி தேர்தலில்

இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் ஜனாதிபதித் தேர்தலில் நிற்கப் போவதாக அறிவித்துள்ளார். தாம் ஜனாதிபதி தேர்தலில் நின்று தமிழ் மக்களுக்கு சரியான பாதை காட்ட விரும்புவதாகவும், தேர்தலில் வெற்றியோ தோல்வியோ அதைப் பற்றித்தான் கவலைப்படப் போவது இல்லை எனவும் அவர் பத்திரிகையாளர் மகாநாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

---

## சமாதான பேச்சுவார்த்தை

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு சமாதான பேச்சு மூலமே தீர்வு காணமுடியும் என இந்த நாட்டு ஜனாதிபதி டி.பி விஜய துங்கா கூறியுள்ளார். ஆனாலும் அதே நேரத்தில் இராணுவநடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தில் தொடர்கின்றது, விமானக்குண்டு வீச்சு செல் தாக்குதல் என்பன தொடர்ந்தும் இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் நடைபெற்று வருகிறது.

---

## பேராசிரியர் அ. துரைராஜா.

யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா யூன் மாதம் 12 ஆம் திகதி தமது 60ஆவது வயதில் கொழும்பில் காலமானார். அவர் இரத்த புற்று நோயாளியாக சில காலம் காணப்பட்டார் இதனால் இவர் தமது துணைவேந்தர் பதவியில் இருந்து மார்ச் 94 இல் ஓய்வு பெற்று இறந்த பல்கலைக்கழகத்தின் முதல்வராகப் பணியாற்றி வந்தார். இவர் புற்று நோயாளியாக இருந்தாலும், இறப்பிற்கு இது காரணமாக இருக்கவில்லை.

இவர் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாக கொண்டவர். தமது ஆரம்ப கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும் பின் யாழ்ப்பாணம் ஹாட்லி கல்லூரியிலும் கல்வி கற்றார் தனது அடிப்படை பட்டப்படிப்பை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முடித்து இங்கிலாந்தின் கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டத்தைப் 1961 இல் பெற்றார்.

பேராசிரியர் துரைராஜா தனது தொழிலை P.W.D உதவி பொறியியலாளராக ஆரம்பித்தார். 1962 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக நியமனம் பெற்றார். 1971 இல் இவர் பேராசிரியராக நியமனம் பெற்று, 1975 இல் பொறியியல் பகுதி டீனாக நியமனம் பெற்றார்.

இவர் 1977, 1978 இல் கனடாவில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் பேராசிரியராக கடமையாற்றினார். இவர் இறந்த பல்கலைக்கழகத்தில் 1983 முதல் 1987 வரை பணியாற்றிய பின் 1988 இல் யாழ் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக கடமையேற்றார். இவர் யாழ் பல்கலைக்கழகத்தை கட்டியெழுப்புவதற்கு மிகவும் பாடுபட்டு உழைத்தவர் யாழ் விவசாய துறை இவரினால் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டது. இவரது கனவுகளில் முக்கியமானது பொறியியல் துறை, ஆனால் பல காரணங்களினால் அது கூடாமல் போயிற்று.

இவருடைய மறைவினால் யாழ் குடாநாடு முழுவதுமே ஆறா துயரடைந்தது கல்வி நிறுவனங்கள் யாவும் இவரது மறைவை அறிந்தவுடன் மூடப்பட்டது இறுதி நாள் ஓர் விடுமுறையாக பிரகடனப்படுத்தப்பட்டு யாழ் குடாநாடே அவரது மறைவால் துக்கம் அனுஷ்டித்தது.

இவரது உடல் கொழும்பில் இருந்து திங்கள் 13 6 94 யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டு பல இடங்களில் இறுதி மரியாதைக்காக வைக்கப்பட்டு 5 6 94 அவரது இராமநாதபுர வாதிரையில் தகனம் செய்யப்பட்டது அவரது இழப்பால் துயருறும் மனைவி பிள்ளைகள், உற்றார், உறவினர் யாவருக்கும் உதயதாரகையின் ஆழ்ந்த அனுதாபங்கள்.

---

## பொன்னாலை நோக்கி ஷெல் தாக்குதல்

24 06.94 அன்று பொன்னாலை கடற்பகுதிக்கு வந்த கடற்படைப் பிரம்பிப் படகும் பொதுமக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டது

அதே சமயம் காரைநகர்ப் பகுதியிலிருந்தும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

---

## பாராளுமன்றம் கலைப்பு

தற்பொழுதுள்ள பாராளுமன்றத்தை கலைத்து எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல்களை நடத்த ஜனாதிபதி திரு. டி பி விஜயதுங்கா விஷேட பிரகடனம் மூலம் அறிவித்துள்ளார்.

புதிய பாராளுமன்றம் ஆகஸ்ட் 25ஆம் திகதி கூடுமெனவும் வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார்.

---

### தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம் நற்செய்தி வாரம்

நற்செய்தி வாரம் 12-06-94- அனுஷ்டிக்கப்பட்டது அவ்வாரத்தின் "மனம் திரும்புங்கள் கடவுளுடைய இராச்சியம் சமீபித்திருக்கிறது" என்ற தலைப்பில் 12.06.94 அன்று அருளுரையும், அதனைத் தொடர்ந்து அவ்வார நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. அதன்படி 5 வட்டாரங்களில் முறையே ஒவ்வொரு நாளும் மாலை 3-30 மணி தொடக்கம் 6.00 மணி வரை சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றது அதன் பிரகாரம்,

13 06.94 அச்சுவேலி வட்டாரம் அச்சுவேலியிலும்

14. 06.94 சாவகச்சேரி வட்டாரம் சாவகச்சேரியிலும்

15 06 94 உடுவில் வட்டாரம் சந்தியபுரத்திலும்

16 06.94 மானிப்பாய் வட்டாரம் சண்டிலிப்பாயிலும்

17 06 94 வட்டுக்கோட்டை வட்டாரம் மூளாயிலும் நடைபெற்றது.

இந்த வட்டாரத்தைச் சேர்ந்த ஒவ்வொரு திருச்சபையும் 15 நிமிடத்திற்குட்பட்ட நாடகத்தை அளித்தன. இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பு நாடகங்கள் 02 07.94 அன்று முழு நாள் கூட்டத்தில் நிகழ்ச்சிகளில் இடம் பெறும். இக்கூட்டம் காலை 8.30 - 5-30 வரை மருதனாமடம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தில் நடைபெறும். அத்துடன் முன் குறிப்பிட்ட தலைப்பிலே கருத்தரங்கும் ஆறுதலாக பகிரங்கக் கூட்டத்தில் நம்ம அத்தியட்சகர் பேராயர் மிகு கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் நற்செய்திப் பேருரையை நிகழ்த்துவார் அந்த நாளுக்குரிய மதிய போசனத்திற்கு முன் குறிப்பிட்டபடி ஒவ்வொரு சபையும் உதவுவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இறுதியாக கூட்டமானது ஜெபத்துடன் கூட்டம் நிறைவு பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரகை ஒளி

எவ்வாறு மனிதன் உயர்ந்திடத் தன்னம்பிக்கை அவசியமோ அவ்வாறே மனிதன் மனிதனாக வாழ்வதற்கும் தன்னம்பிக்கை அவசியம்


# உதயதாரகை

ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை

Estd. 1841

மலர்: 155 24- 06 - 1994 இதழ்: 14


## கிறிஸ்தவ ஈகை

கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும் என மல்கியா இறைவாக்கின் ஊடாக கடவுள் இஸ்ரவேல் மக்களுக்கு கூறினார். கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும் தேடுங்கள் கண்டடைவீர்கள் என்று தானே இயேசு பிரான் கூறினார். வேதாசமத்தில் எங்கும் இவ்வாறு கூறவில்லையென நீங்கள் கூறலாம். ஆனால் கடவுளை பரீட்சித்து பார்க்கும்படி மல்கியா கூறிய போது இதனையே அவர் மனதில் கொண்டிருந்தார்.

குருடானவைகளையும், நோயுள்ளவைகளையும் பலியாகப் படைப்பதன் மூலம் இஸ்ரவேலர் கடவுளை வஞ்சித்தனர் என மல்கியா கூறுகிறார். தசமபாகத்தைச் செலுத்தாமல் அவர்கள் கடவுளை கொள்ளையடித்தனர்.

இன்று பல சபைகளும் தங்களுக்கு பொருளாதார நெருக்கடி உண்டு எனக் கூறுகின்றனர் தமது மாத கொடுப்பனவை கொடுக்க முடியவில்லை. ஆலயங்களை திருத்த முடியவில்லை; ஏழைகளுக்கு உதவ முடிவில்லை. இவர்களது பொருளாதார நெருக்கடிக்கு காரணம் யாது? முதலில் சபையார் பலர் வெளிநாடுகளுக்கும், கொழும்புக்கும் சென்றுவிட்டனர்; எஞ்சியிருப்போரால் கொடுப்பதற்கு வசதியில்லை. மேலும் புதிதாகச் சேருவோரும் தங்களுக்கு பொருளாதார உதவி தேவை என எதிர்பார்க்கின்றனர் பல சபைகளும் எனவே வெளிநாடுகளில் உள்ளோரிடம் தமக்கு உதவும்படி எதிர்பார்க்கிறனர் இன்று உள்ள நிலமையில் சபை என்ன செய்ய முடியும்? உண்மையில் சபையார் கொடுப்பது அவர்களது வருமானத்துடன் தொடர்பில்லாமல் இருக்கிறது. உ+ம் R<4000 ரூபா வருமானம் பெறுகிறவர் 20 ரூபாயே கொடுக்கிறார் அதி உயர் பெறுமானம் 75 ரூபாயிலும் அதிகரிப்பது மிகக் குறைவு தம்மை ஏழை எனக் கூறுவோரும் நல்ல ஆடைகளிலும் களியாட்டங்களிலும், படம் பார்ப்பதிலும் அதிகமாக செலவழிக்கின்றனர் இவர்கள் கடவுளிலும் பணத்துக்காக அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

இப்படிப்பட்டவர்களையே மல்கியா எச்சரிக்கிறார் கடவுளுக்கு நிறைவாக கொடுக்கும்படி கேட்கிறார் இதுதான் ஒரே இடம் கடவுளைச் சோதிப்பதற்கு தசமபாகத்தை பண்டகசாலைக்கு கொண்டு வந்து எனது வீட்டை உணவால் நிரப்புங்கள் இதன் மூலம் என்னைப் பரீட்சித்துப் பாருங்கள் வானத்தின் பலகணிகளைத்திறந்து உங்கள் மேல் ஆசிர்வாதத்தை பொழிய மாட்டேனோ மல்: 3.6 என கடவுள் இஸ்ரவேலரை பார்த்து கேட்கின்றார்.

தனது அன்பை மற்றவர்கள் மேல் சொரிவதற்காக பயன்படுத்தும் கருவிகளே பணமும், செல்வமும் என ஒருவர் புரிய வேண்டும் கொரிந்தியருக்கு எழுதிய கடிதத்தில் மக்கதோனியா மக்கள் தமது தகுதிக்கும் அதிகமாக கொடுத்தனர். அதிலும் எவ்வித வற்புறுத்தலும் இல்லாது விருப்பத்தின் பேரிலேயே கொடுத்தனர். எல்லோரும் பின்பற்ற வேண்டிய மாதிரிகை இதுவாகும். தம்மை கடவுளுக்கு முதலில் அர்ப்பணித்தாலேயே இப்படிச் செய்யமுடிந்தது கடவுளுக்கு தம்மை அர்ப்பணித்ததால், கடவுள் தம்மை பயன்படுத்த இடம் கொடுத்தனர். இரண்டாவதாக மற்றவர்களை நேசித்தனர். எனவே தேவைப்பட்டவர்களுக்கு உதவ முன்வந்தனர்.

தென் இந்தியாவில் ஒரு ஆலயம் முழுவதுமாக உள்ளூர் சபையினராலேயே கட்டப்பட்டது, தனது ஆலயம் என அவர்கள் கருதியதாலேயே அப்படிச் செய்தனர். மேலும் அங்கு மிஷனரிமாரையும் அனுப்பி பண ஆதரவு கொடுக்கின்றனர். இதனால் சபை வளர்கிறது.

கிறிஸ்தவர்கள் நிறைவாக கொடுத்தால் சபைகள் நெருக்கடிக்கு ஆளாகா ஒருவர் கொடுப்பதற்கு வசதியில்லை எனில் திட்டமிடலாம் கடையிலிருந்து திரும்பும் போது பையிலுள்ள சில்லறையை உண்டியலில் போட்டு வைக்கலாம். மாத முடிவில் அவர் கொடுக்க நினைத்தாலும் அதிகம் இருப்பதை உணருவார் கடவுளுக்கு கொடுப்பதன் மூலம் அவரை பரீட்சித்துப் பாருங்கள். கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்.

## பிரெஞ்சுப் படைகள் றுவாண்டாவில்

றுவாண்டாவில் இடம் பெறுகின்ற உள்நாட்டுப் போரால் 5 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் படுகொலை செய்யப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது இதை தடுப்பதற்காக பிரெஞ்சு இராணுவம் செல்வதற்கு ஐ நா. பாதுகாப்புச் சபை அனுமதி வழங்கியுள்ளது. இராணுவம் செல்வதற்கு ஆதரவாக பத்து நாடுகளும் வாக்களித்துள்ளன. எதிராக ஒரு நாடும் வாக்களிக்கவில்லை. 5 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

றுவாண்டாவில் ஹூத்து இன அரசாங்கத்துக்கு எதிராக சிறுபான்மை ருத்ஸு இன போராளிகள் சண்டையிட்டு வருவது அனைவரும் அறிந்ததே எனினும் தமது படைகள் மக்கள் படுகொலைகளை நிறுத்தவே அங்கு செல்கின்றனவென்றும். ருக்ஸி றுவாண்டோ தேச பக்த முன்னணிக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அல்லவென பிரெஞ்சு வெளியுறவு அமைச்சர் அலெய்ன் ஜூபே கூறியுள்ளார்

ஐ. நா. அறிவிப்பில் 2500 பிரெஞ்சுப் படையினர் றுவாண்டாவில் இரண்டு மாதகால மனிதாபிமானச் சேவையில் ஈடுபடுவார்கள் என அறிவித்துள்ளது. இதே சமயம் றுவாண்டாவில் இரு தரப்பினரோடும் மோதல்களில் ஈடுபடக் கூடாது என தனது படையினருக்கு பிரெஞ்சு அரசு உத்தரவிட்டுள்ளது.

## இரு பொம்மர்கள் குண்டுகளை வீசின

மக்கள் வதிவிடங்கள் மீது ஹெலியும், பொம்பர் இரண்டும் குண்டுகளை வீசியும், 50 கலிபர் வேட்டுக்களையும் தீர்த்தன. இச் சம்பவம் வலிகாமம் வடக்கு மேற்குப் பகுதியில் இம் மாதம் 23ஆம் திகதி காலை 6 மணியளவில் இடம் பெற்றது பின்பு அன்று காலை 7- 20 மணியளவில் மீண்டும் அளவெட்டிப் பகுதியில் 5 குண்டுகளை விமானங்கள் வீசியதாகவும் இதனால் சில வீடுகள் சேதமடைந்ததாகவும் பயிர்களும் நாசமாகியதாகவும் செய்திகள் வந்துள்ளன.

## மாணவர் சீருடை துணி

ஒரு பகுதி சீருடைத்துணி சோமாரிக்கப்பலில் இவ்வாரம் வந்துள்ளன, யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு, விநியோகிப்பதற்காக, கப்பலில் இருந்து இறக்கப்பட்டு யாழ். கல்வி அலுவலகத்திற்கு எடுத்து வரப்பட்டு இத் துணி, கோட்ட அலுவலகங்கள் மூலம் அடுத்த வாரம் மாணவர் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## விளையாட்டுப் போட்டி

வலயம் II பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி 23 5 94 அன்று யாழ் கல்லூரி மைதானத்திலும் தடைதாண்டும் ஓட்டம் தடி ஊன்றி பாய்தல் 24 6 94, 25 6 94 அன்று புத்தூர் சோமஸ் கந்தா மைதானத்தில் நடைபெற்றது. கோட்ட மட்டத்தில் முதல் இரண்டு இடங்களைப் பெற்றவர்கள் இதில் கலந்து கொண்டனர் யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து 40 வீரர்களும் வீராங்கனைகளும் பங்கு பற்றினர்.

## யாழ்ப்பாணக் கல்லூரி தர்மகர்த்தா சபை

யாழ்ப்பாணக் கல்லூரி தருமகர்த்தா சபை அமெரிக்காவின் பொஸ்ரொன் நகரத்தில் 2-8-94. அன்று நடைபெற்றது. அதில் யாழ் கல்லூரி ஆளுநர் சபை தலைவர் பேரருட் டீ. ஜே. அம்பலவாணர் அவர்களும் யாழ் கல்லூரி அதிபர் திரு ஜீ.இராஜநாயகம் அவர்களும் கலந்து கொண்டனர். அங்கு யாழ் கல்லூரியின் புதிய முயற்சிகள்- பட்டப்படிப்பு பிரிவு- பற்றி எடுத்துரைக்கப்பட்டன. இக் கஸ்டமான காலத்திலும் ஆசிரியர்களின் சிறந்த சேவை பாராட்டப்பட்டது.

தருமகர்த்தா சபைக் கூட்டம் முடிவடைந்த பின்னர்- அதிபர் கனடா சென்று அங்கு உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் பலரையும் சந்தித்தார். பழைய மாணவர்கள், யாழ்ப்பாணக கல்லூரி பற்றியும், அதன் ஆசிரியர், மாணவர் பற்றியும் ஆவலுடன் விசாரித்தனர். யாழ் குடாநாட்டு நிலமை பற்றியும் அதிபரிடம் வினாவி அறிந்து கொண்டனர்

கலாநிதி ரொபர்ட் போட்டர் மிஷனரி அவர்களின் துணிவைப் பாராட்டி அவரைப் போன்று யாழ்ப்பாணம் வரவேண்டும் எனவும் கூறினார். யாழ்ப்பாணக் கல்லூரிக்கு தங்களாலான உதவிகளைச் செய்வதாகவும் வாக்களித்தனர்.

## சதை அரித்துத் தின்னும் பக்றியா நோய் இலங்கையிலும் பரவக்கூடும்

பிரிட்டனிலும், ஸ்கண்டிநேவியன் நாடுகளிலும் நியூஸிலாந்திலும் பரவி வரும் புதிய ஆட்கொல்லி நோயினால் இலங்கையர் எவரும் பாதிக்கப்பட்டுள்ளனரா என்று இங்குள்ள ஆஸ்பத்திரிகள் கவனமாக பரிசீலனை மேற்கொள்ள வேண்டுமென இலங்கை மருத்துவ ஆய்வுநிலையத்தின் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

ஹி 'மொலிடிஸ் குறூப் ஏ' என்ற வைரஸ் கிருமி நோயாளியின் சதையை அரித்துத்தின்று 24 மணித்தியாலங்களுக்குள் மரணத்தை ஏற்படுத்துகின்றது.

இந்த நோய் பற்றி பிரிட்டிஸ் ஆய்வாளர்கள் கூறுகையில்.

இந்நோயைப் பரப்பும் கிருமிகளை 'ஸ்ரெப்ரோ கொக்கஸ் என இனம் கண்டுள்ளனர். சிறுவர்களுக்கு ஏற்படும் காய்ச்சல் இவ்வைரஸால் ஏற்படுவதாக கூறப்படுகிறது.

தோலில் ''சொறியலை'' ஏற்ப இக்கிருமி ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு அங்குலம் முன்னேறக்கூடியது. இப்பகுதியை சத்திர சிகிச்சை மூலம் பிரித்தெடுப்பதே பிரதான முறையாகும் எனக் கூறப்படுகிறது.

இந்நோய் பற்றி மேலும் தகவல்களைப் பெறுவதற்கு, இலங்கை சுகாதார அதிகாரிகள் உலக சுகாதார அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Morning Star

Diocesan Office, Vaddukoddai. 24 - 06 - 1994


EDITORIAL

# Christian Giving

'Give and it shall be given to you.' Thus spoke God through Malachi. 'We find Jesus saying, 'seek and you shall find, knock and it shall be opened and ask and it shall be given,' but nowhere in the Bible it is said give and it shall be given' you may say. But this is what was at the back of Malachi's mind when he asked us to test God.

Through Malachi God told Israelites that they have cheated Him by offering blind, lame and sick animals in sacrifice. They have robbed God by not bringing the full tithe into His Storehouse.

Today we find many churches complaining that they are unable to meet their financial commitments They are unable to pay their quotas; they are unable to do maintenanae and are unable to help the poor and the needy.

What are the reasons for the financial difficulties Churches face? Firstly most of the contributing members have migrated - some have gone abroad and others have gone to Colombo. A few who remain in Jaffna are unable to contribute much. So some churches have tried to contact their former members who have migrated; but the response is not very good - so they say. In addition, there are also new members who think they are in need of financial help and look to their church for assistance. What can the poor church do under such circumstances? The truth is that many give less than what they can afford. Their contributions are very low compared to their income. We find that people who earned more than Rs. 4,000/ give as low as Rs. 20/- per month & the maximum is hardly more than Rs. 75/- per month. We also find people who claim to be poor spend lavishly on clothes, and functions like weddings and spending large sums of money on video films and liquor. These show what their priorities are. These people value money more than God himself.

Malachi warned such people and extorted them to give God abundantly. This is one place where God had asked the Jews to test Him and see. Bring the full tithes into the storehouse that there may be food in my house and thereby put me to the test. Will I not open the windows of heaven for you and pour down for you an overflowing blessing (Mal 3 : 6)

One must realize that money and possessions are tools for him to use to express his love towards others. Paul in his letter to Corinthians states that Macedonians gave much more than they could afford. That also they gave on their own free will no one coerxed them. This is the model everyone should follow They were able to do so because they committed themselves to God first. Because they gave themselves to God they allowed him to use them. Secondly they loved others. Because they loved others they wanted to help those in need.

The front cover of South India Churchman once carried picture of a church which was entirely built by the local congregation. These people felt that it was thier own church and therefore it was their duty to maintain it, so they even went to the extent of building one and raised the entire money from within themselves, Some local congregations in India also support the missionaries they send to other parts. This is one of the reasons for growth of church, in India.

If we Christians also give abundantly the churches will not face financial difficulties and we need not go begging. If anyone feels that he cannot afford let him first plan his budget Many find some coins clinging in their pockets when they return from market. They can insert those clinging coins into a piggy bank. At the end of the month they will find more money than what they intended to give the church

Test your Lord God by giving him what is due to him. Give and it shall be given to you.

## Prof. A. Thurairajah Expired ...

Continued from page 1)

People of all walks loved the 'V. C.' very much and the entire Peninsula mourned his death for three days. All educational institutions closed when they heard his death. Holiday was declared on the day of his funeral and College and National Flags flew at half-mast.

The mortal body was brought from Colombo on Monday, kept lying in state at University of Jaffna and then taken by motorcade to his residence at Vathiri, where funeral rites were performed. The whole of Jaffna thronged to pay its last respects to the late great educationist.

The charriot of Jaffna fell on 12th June 1994. The Morning Star extends its heartfelt sympathies to his bereaved wife children and relatives. May his soul rest in peace.

## The Church......

(Continued from page 1)

any time.) The choir raised more than 13,000 for the Yale New Haven Hospital's Pediatric AIDS fund.

The May 1994 One World magazine, from the World Council of Churches, runs a lead article on the faith and work of an Oklahoman mother, Mary Catherine Smothermon, who watched a beloved son sicken, then recover with the temporarily successful use of the AZT drug, and then finally succumb to the disease. Ms. Smothermon at first sought to keep her son's illness completely secret from the small Oklahoma town of Chandler, because she feared the indignant reaction of the Christian community, primarily, and so did her son Kirt. Both mother and father worried about losing their jobs and even about being forced to move out of the town, which was not an uncommon event in the earlier days of the AIDS plague. They attended a support group in Oklahoma City but told no one at home about it.

When Kirt first recovered and his hair grew back and he regained his weight, he travelled for the Oklahoma health department, talking to students and others anonymously' to Protect his family. This moved his parents to make a public announcement of his illness. But very soon he was back in bed permanently.

During the last three months of his life, unexpectedly, many friends and co-workers did come to the Smothermon home to visit and to help. Even Kirt saw that church people actually did care. After Kirt died in March 1989 Ms Smothermon decided that she had to "step, out" in faith. She resigned her job and began a work of AIDS education and care that has become the Oklahoma Regional AIDS Interfaith Network. In a part of the United States where one would expect the church to be more judgemental rather than loving, "RAIN seeks to change that prejudice with factual' up-to-date information on HIV and AIDS. We help faith communities realize the importance of com passion and acceptance. The network trains and supervises volunteer teams who become extended family and support for people with AIDS" Each patient has the services of 10 or more volunteers, who provide social opportunities, transportation, meal preparation and housekeeping as well as emergency services.

The teams do not insist on religious discussion, as often patients have been hurt by "Christian" reaction. But if a client wants to talk about spiritual matters' they will also do that or bring in pastoral support. "Sometimes' receiving unconditional love, our clients are able to open their hearts to God. And lives--ours and our clients-- are transformed.'

## BOOKS OF BOOKS ....

(Continued from page 1)

were classed as having so many stichoi. and of course however you recopied them and arranged them on the page. the number of stichoi remained constant.

Now there is a sixth century, New Testament manuscript called the Codex Claromontanus' which gives the number of stoehoi in each New Testament book. Further there is an edict of Diocletian published early in the forth century which fixes the prices for all sorts of things; and amongst other things it fixes the rates for the pay of scribes; and the pay is twenty-five denarii per hundred stichoi. A denarius was about four pence; so we may say that the rate was approximately one hundred pence per hundred stichio.

Now in Marhew there are 2,600 stichoi in Mark 1,600 in Luke 2,900 and in John 2,000. That is to say, in the four Gospels there are 9 100 stichoi, which is to say that at that time a copy of the four Gospsls would coast ninety one pounds. If you work it out on the same basis, a copy of the letters of Paul would cost more than fifty pounds. And now you can buy the whole Bible for less than fifty pence

When Wycliffe published the Bible in English for the first time at the end of the fourteenth century it was, of course, before printing was invented.

(Continued to next issue)

Registered as a Newspaper at the General Post Office Sri-Lanka under No. QJ/140/89 News Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press. 182, 1st Cross Street, Jaffna on Friday the 24th of June 1994 and published by Mr. D S, SOLOMON, Diocesan Office Vaddukoddai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org